

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 284 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 11 – வியாழக்கிழமை 25 மே 2023 – கோவை ★★ 10+8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 284 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 11 - Thursday 25 May 2023 - Kovai ★★ 10+8 Pages ₹ 5.00




அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்குச் செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2023) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.



அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்குச் செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2023) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உள்ளனர்.

### தொழில் முதலீடுகளை ஈர்க்க நூற்றுக்கணக்கான நிறுவனங்களுடன் சந்திப்பு!

# சிங்கப்பூர், ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமையும்!

## வெளிநாடுகள் புறப்படும் முன் சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, மே 25 -**

**வெளிநாடுகள் புறப்படும் முன் சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது முதல்வர் அவர்கள், "தொழில் முதலீடுகளை ஈர்க்க நூற்றுக்கணக்கான நிறுவனங்களை சந்திக்கவிருப்பதாகவும் சிங்கப்பூர், ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமையும்" என்றும் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2023) அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்குச் செல்வதற்கு முன் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

அனைவருக்கும் முதலில் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வருகிற 2024 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறவிருக்கக்கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு, பல்வேறு நாடுகளுக்குச் சென்று முதலீட்டாளர்களுக்கு நாங்கள் அழைப்பு விடுத்துக் கொண்டு இருக்கிறோம்.



அரசு முறை பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்குச் செல்வதையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2023) சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரிய தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

அந்த அடிப்படையில், ஒன்பது நாள் பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு பயணத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன். என்னோடு தொழில்துறை அமைச்சர் அவர்களும், அரசு துறையினுடைய உயர் அதிகாரிகளும் வருகிறார்கள். ஏற்கனவே, கடந்த ஆண்டு மார்ச் மாதம், அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளோடு ஐக்கிய அரபு நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்டு பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

**பயணத்தின் நோக்கம்!**

அதன் தொடர்ச்சியாகவே, இப்போது ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு இந்தப் பயணத்தை நான் மேற்கொண்டிருக்கிறேன். நான் செல்கின்ற இடங்களில் எல்லாம் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுப்பதோடு முதலீட்டாளர்களை நேரிலும், மாநாடுகள் வாயிலாகவும் சந்தித்தும் பேசவிருக்கிறேன். ஒரு சில புதிய தொழில் ஒப்பந்தங்களும் கையெழுத்தாக இருக்கின்றன.

இந்த பயணத்தினுடைய முக்கிய நோக்கம் என்பது வருகிற 2024 ஜனவரி மாதம் நடைபெற இருக்கக்கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுப்பதுதான். ஆகவே, அந்த நோக்கத்தோடுதான் செல்கிறேன். உங்களுடைய வாழ்த்துகளோடு செல்லுகிறேன், நீங்களும் என்னை வாழ்த்தி அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கேள்வி:** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து……

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** கடந்த மார்ச் மாதம் ஐக்கிய அரபு நாட்டின் பயணத்தின்போது பெறப்பட்டிருக்கக்கூடிய முதலீடுகள் எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால், கடந்த முறை நான் மேற்கொண்ட துபாய் பயணத்தின்போது 6,100 கோடி ரூபாய் முதலீடுகள் மூலம் 15,100 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தக்கூடிய வகையில் 6 நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டது. அதில் ஷெராப் குழும நிறுவன முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. லூலூ பன்னாட்டு குழுமம் கோயம்புத்தூரில் தன் திட்டத்தை தொடங்கிவிட்டது. சென்னையில், தன் திட்டத்திற்காக நிலம் தேர்வு செய்யும் பணிகளை

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## தமிழ்நாட்டில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மே 25 –

வெப்ப சலனம் காரணமாக தமிழ்நாட்டில் 4 நாட்கள் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

சென்னையைப் பொறுத்த வரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று (25.05.2023) முதல் 27-05-2023 வரை மன்னார் வளைகுடா மற்றும் தமிழக ஆந்திர கடலோரப் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

26-05-2023 மற்றும் 27-05-2023: இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கி.மீ வேகத்திலும் இடையிடையே 55 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### சிங்கப்பூர் சென்றடைந்தார்! பல்வேறு தமிழ் அமைப்பினர் வரவேற்றனர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு பயணம்!

## தொழில் நிறுவன தலைமைச் செயல் அலுவலர்களைச் சந்தித்துப் பேசினார் முதல்வர்!

**சென்னை, மே 25-**

**புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு தொடர்பாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு நேற்று முன் தினம் காலை பயணம் மேற்கொண்டார். சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் திரளாகத் திரண்டு வாழ்த்து தெரிவித்தனர். சிங்கப்பூர் சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிங்கப்பூர் விமான நிலையத்தில் பல்வேறு தமிழ் அமைப்பினர், சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் திரளாகத் திரண்டு மலர் கொத்து, புத்தகங்கள் வழங்கி அன்புடன் வரவேற்றனர்.**

அது பற்றிய விபரம் வருமாறு: -

தமிழ்நாட்டிற்கு முதலீடுகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வரவும், வரும் ஜனவரி 2024இல் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கவும் அரசு முறைப்பயணமாக, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2023) பயணம் மேற்கொண்டார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பெற்று – சிறப்புரை!**

சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு நேற்று முன்தினம் (23.5.2023) காலை 9.45 மணியளவில் பயணம் மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, சென்னை விமான நிலை யத்தில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் திரளாகத் திரண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சர் அவர்களுடன் திருமதி. துர்கா ஸ்டாலின் மற்றும் தொழில் துறை அமைச்சர், அரசு உயர் அதிகாரிகள் சென்றுள்ளனர்.

சென்னை விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம் சிங்கப்பூர் நேற்று முன்தினம் சென்றடைந்தார். சிங்கப்பூர் விமான நிலைய வளாகத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உள்ளிட்ட பல்வேறு தொழிலதிபர்கள், பல்வேறு தமிழ் அமைப்பினர், சிங்கப்பூர் வாழ் தமிழர்கள், அரசு உயர் அதிகாரிகள் மலர் கொத்து, புத்தகங்கள், பொன்னாடைகள் வழங்கி அன்புடன் வரவேற்றனர்.

**சிங்கப்பூர் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!**

சிங்கப்பூர் சென்றடைந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023), போக்குவரத்து தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ஈஸ்வரன் அவர்களையும், உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம் அவர்களையும் மற்றும் அந்நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்களான டெமாசெக் (Temasek), செம்கார்ப் (Sembcorp) மற்றும் கேப்பிட்டாலாண்டு இன்வஸ்மன்ட் (CaptiaLand Investment) அதிபர்கள் / முதன்மைச் செயல் அலுவலர்களையும் சந்தித்துப் பேசினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) பேம்டிஎன் (FameTN), டான்சிம் (TANSIM) மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) ஆகியவை சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த பல்கலைக்கழகமான SUTD (Singapore University of Technology & Design), சிங்கப்பூர் இந்தியா கூட்டாண்மை அமைப்பு SIPO (Singapore India Partnership Office) மற்றும் சிங்கப்பூர் இந்தியா தொழில் வர்த்தக கூட்டமைப்பு SICCI (Singapore Indian Chamber of Commerce and Industries) ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து சிங்கப்பூர் வாழ் தமிழர்கள் ஏற்பாடு செய்துள்ள கலைநிகழ்ச்சியிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்.

### ரூ.2,000 மாற்றிட

## ரூ.50 ஆயிரத்துக்கு மேல் 'பான்' கார்டு கட்டாயம்!

புதுடெல்லி, மே 25 –

2,000 ரூபாய் நோட்டுகள் வாபஸ் பெறப்படுவதாக ரிசர்வ் வங்கி கடந்த 19ந் தேதி அறிவித்தது. அந்த நோட்டுகள், செப்டம்பர் 30ந் தேதி வரை செல்லும் என்றும், அதற்குள் வங்கியில் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம் அல்லது வங்கி கணக்கில் டெபாசிட் செய்யலாம் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

இந்நிலையில், இந்த அறிவிப்புக்கு பிறகு முதல் முறையாக ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: 2,000 ரூபாய் நோட்டுகள் வாபஸ் அறிவிப்பு, நாணய மேலாண்மை நடவடிக்கையின் ஒரு அங்கம்தான்.

வங்கி கணக்கில் ரூ.50 ஆயிரம் அல்லது அதற்கு மேல் டெபாசிட் செய்தால், வருமானவரி தேவைக்காக 'பான்' எண்ணை குறிப்பிடுவது நடைமுறையில் இருக்கிறது. 2,000 ரூபாய் நோட்டுகளை பயன்படுத்தி, ரூ.50 ஆயிரம் டெபாசிட் செய்வதற்கும் அது பொருந்தும் என்று கூறினார்.